1970 நவம்பர் 27] [பேரவைத் தலைவர்]

என்ற காரணத்தை ஒட்டி ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். ஒரு நிகழ்ச்சி இனி நடைபெறப்போகிறது என்ற ஒரு காரணத்தைக் காட்டி ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுக்கக்கூடாது என்பதினாலும், ஸ்ட்ரைக்குகளைப்பற்றி விவாதிப்பதற்கு ஒற்றிவைப்புத் தீர்மானங்கள் அனுமதிக்கக்கூடாது என்று விதி முறைகள் இருப்பதன் காரணத்தினாலும், இதற்கும் அனுமதிதர மறுக்கிறேன்.

(ஈ) உணவு தானியங்களின் விலைக்குறைவால் விவசாயிகளின் பாதிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திரு. கே. ஆர். நல்லசிவன் அவர்கள் உணவு தானியத்தின் தற்போதைய விலை நிலவரம் அதனை உற்பத்தி செய்வதற்கு ஆகும் செலவைவிட குறைந்துவிட்டதன் காரணமாக மாநிலத்திலுள்ள விவசாயிகளின் நிலை பாதிக்கப்பட்டு, உணவு தானிய உற்பத்தி குறையும் என்ற அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை விவாதிக்கவேண்டும் என்று ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள்.

விலைவாசி உயர்வு தாழ்வு என்பது நாட்டிலே அவ்வப்பொழுது நடைபெறுகின்ற நிகழ்ச்சியாகும். ஆகவே, இதற்கும் அனுமதி தர மறுக்கிறேன்.

(உ) காவிரி நீர் குறித்து மைசூர், கேரளா, தமிழ்நாடு ஆகிய மாநிலங்களிடையே ஏற்பட்டுள்ள விவாதமும், அதன் விளைவுகளும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து திரு. இராமமூர்த்தி அவர்கள்,

"The impact on our State because of the situation created over the Cauvery Water dispute between Mysore, Kera'a and our என்பதைப்பற்றி விவாதிக்கவேண்டும் என்று ஓர் ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதைப்பற்றி ஒரு அறிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுக்க இருக்கிற காரணத்தினால், நான் இதற்கும் அனுமதி தர மறுக்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: I am no disputing your ruling இந்தப் பிரச்சினை பல்வேறு நேரங்களில் இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது. பல அறிக்கைகள் தரப்பட்டிருக்கின்றன. இருந்தாலும் கூட, இந்தப் பிரச்சினை முடிவடையாதது மட்டுமல்ல, மிகவும் பயங்கரமான விளைவுகளைப் பற்றி நம்முடைய அமைச்சர்கள் நாள் தோறும் விவாதிக்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. குற்றச்சாட்டுகளும், பல்வேறு அரசியல் காரணங்களும் தலைவர்கள் மீது சுமத்தப்படுகின்றன. ஆகவே, இதைப்பற்றி விவாதிக்கவேண்டிய அளவுக்கு நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன......

[1970 நவம்பர் 27

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தீர்ப்பு கொடுத்த பிற்பாடு, அதைப்பற்றி மறுபடியும் பேசக்கூடாது.

திரு. ஆ. கு. சுப்பையா : நான் வெள்ளத்தைப்பற்றி ஒரு ஒற்றி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அந்த விஷயம் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கிட்டத்தட்ட இந்த மன்றத்தில் பாதி உறுப்பினர்கள் இதைப்பற்றித் தீர்மானங்கள் கொடுத்திருக் கிறார்கள் என்று நினைக்கிறேன். அமைச்சர் அவர்கள் இதைப்பற்றி ஒரு விரிவான அறிக்கையை தயாரித்துக்கொண்டிருக்கிறார்கள். எல்லோரும் தீர்மானம் கொடுத்து, அதைப்பற்றி அவர்களைப் பேச விடுவதற்குப் பதிலாக (திரு. கே. விநாயகம் : சென்னையில் கூடத் தான் வெள்ளம்) அமைச்சர் அவர்கள் அறிக்கை விடுக்க இருப்பதால், அதற்காக நான் இந்தத் தீர்மானங்களை நிறுத்தி வைத்திருக்கிறேன். அறிக்கை விரைவிலே தயாரிக்கப்பட்டு, அவையிலே வெளியிடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. கவன ஈர்ப்பு.

காவிரி நீர்ப்பங்கீடு பற்றி தமிழ்நாடு, மைசூர் மாநிலங்களிடையே நடந்த பேச்சுவார்த்தை தோல்வியுற்றது குறித்து.

THIRU G. GOMATHYSANKARA DIKSHITHAR: Under Rule 41 of the Assembly Rules I call the attention of the Hon. Minister for Public Works to a matter of urgent public importance, viz., the failure of the talks beween the States of Tamil Nadu and Mysore on Cauvery water distribution.

திரு. வி. கே. கோதண்டராமன் : ஸார், சட்டப் பேரவை விதி களின் 41-வது விதியின்கீழ் காவிரி நீர் பகிர்ந்தளிப்பது குறித்து தமிழ்நாடு, மைசூர் மாநிலங்களுக்கிடையே நடந்த பேச்சு வார்த்தை கள் தோல்வியடைந்தது பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

THIRU A. A. SUBBA RAJA : Under Rule 41 of the Assembly Rules I call the attention of the Hon. Minister for Public Works to a matter of urgent public importance viz., the failure of talks between the States of Tamil Nadu and Mysore on Cauvery Water distribution.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டுக்கும் மைசூருக்கும் இடையே 1892-லும், 1924-லும் ஏற்பட்ட ஒப்பந்தங்களை மீறி மைசூர் அரசு காவிரி ஆற்றின் கிளை நதிகளுக்குக் குறுக்கே கீழ்க்காணும் பாசனத் திட்டங்களை முனைந்து நிறைவேற்றி வருகிறது என்பதை உறுப்பினர்கள் அறிவர் :—

1. ஹேமாவதி.
2. கபினி.